# உதயன்

சுடர் : 37 கதிர் : 346 | திங்கட்கிழமை 07 நவம்பர் 2022 | ஐப்பசி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை: ரூ. 50


## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 7
12.5 கிலோகிராம் எடையுள்ள லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 80 ரூபாவால் அதிக ரிக்கப்பட்டுள்ளது. நேற்று நள் ளிரவு முதல் இந்த விலையேற் றம் நடைமுறைக்கு வந்துள் ளது. 11 ▶

ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம்

## ஹெரோய்னுக்கு அடிமையான 183 பேர் இனங்காணப்பட்டனர்!

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான 183 பேர் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.
வடக்கு மாகாண ஆளுநர் அலுவ லகத்தில் நீதி அமைச்சர் தலைமை யில் அண்மையில் 11 ▶

பல வழக்குகளுடன் தொடர்புடைய

## சந்தேகநபரிடமிருந்து ஹெரோய்ன் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 7
கடை ஒன்றை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் நேற் றுக் கைது செய்யப்பட்ட 18 வயது இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 5 கிராம் 110 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்ட 11 ▶

## சுதுமலையில் வீடு புகுந்து 3 இலட்சம் ரூபா திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 7
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலை வடக்கிலுள்ள வீடு ஒன்றில் 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.
வீட்டில் உள்ளவர்கள் மேல் மாடியில் தூங்கி 11 ▶

## போதைப்பாக்கு விற்றவர் கைது

வாங்கியோரும் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், நவ. 7
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியன்காடு விளையாட்டரங்க வீதிப் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து உயிர்கொல்லி கஞ்சா கலந்த 10 ▶

உயிர்கொல்லி

## ஹெரோயினுடன் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 7
இளவாலைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இருவேறு 04 ▶

# மாவீரர்நாளை நினைவுகூர்ந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமாம்!

## துயிலும் இல்லத்தை துப்புரவு செய்தவர்களை மிரட்டிய பொலிஸார்

மன்னார், நவம்பர் 7
மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர்நாள் ஏற்பாட்டுக் குழுவினரால் சிரமதானப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அங்கு சென்ற அடம்பன் பொலிஸார், மாவீரர்நாளை நினைவுகூர்ந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். 11 ▶



## மாட்டுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, நவ. 7
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக் கச்சி - கட்சன் வீதிப் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு 11 ▶



## 'ஜனநாயகப் பொன்விருது' இரா.சம்பந்தனுக்கு

கொழும்பு, நவ. 7
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயகப் பொன்விருது' வழங்கப்பட்டுள்ளது. 11 ▶

## சம்பந்தரைப் போல் ஒரு தலைவரில்லை!

புகழாரம் சூட்டுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, நவ. 7
நாட்டில் ஏற்பட்ட அரசியல் - பொருளாதார நெருக்கடி களுக்குத் தீர்வு காணக்கூடிய சிறந்த தலை 11 ▶

## ஐ.நா. பொதுச் செயலருடன் ஜனாதிபதி நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, நவ. 7
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்ரஸை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்துள்ளார். 04 ▶

## தூரசேவைப் பேருந்துகள் தினமும் இனிச் சோதனை

வவுனியா விபத்தில் மூவர் உயிரிழப்பை தொடர்ந்து வடக்கு ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 7
ஒவ்வொரு நாளும் தூரசேவையில் ஈடுபடும் பேருந் துகளின் வழித்தட அனுமதிப்பத்திரத்தை ஏ-9 வீதி யில் பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரி வித்தார்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம் பெற்ற சொகுசுப் பேருந்து விபத்தில் மூவர் உயிரிழந் திருந்தனர். இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார். 11 ▶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியப்பட்டியல் கோரும் ஆதிவாசிகளின் தலைவர்

கொழும்பு, நவ. 7

ஆதிவாசிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் ஆசன ஒதுக்கீடொன்று இடம்பெற வேண்டும் என்று ஆதிவாசிகளின் தலைவர் ஊருவ ரிகே வன்னில எத்தோ நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

அனைத்து இனங்கள் பற்றியும் நாடாளு மன்றத்தில் பேசப்படுகின்றது.

ஆனால், எம்மைப் பற்றி எவரும் கதைப் பதில்லை. தோல்வி அடைந்தவர்கள்கூட தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்து விடுகின்றனர்.

எனவே, எம்மவர்கள் பற்றிக் கதைப்பதற்கு எமக்கும் தேசியப்பட்டியல் ஊடாகவேனும் ஒரு வாய்ப்பு கட்டாயம் கிடைக்க வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுத்தால் அது பயன்மிக்கதாக அமையும் - என்றார்.

(ம-14-44)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்ய குழு நியமனம்!

கொழும்பு, நவ. 7

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதற்குக் குழுவொன்று அமைக் கப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு அர சாங்கம் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளது. அதனடிப்ப டையில், தற்போது நடைமுறை யிலுள்ள பங்கரவாதத் தடைச்சட் டத்தை முழுமையாக மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று அமைக்கப்பட் டுள்ளது.

குழுவானது, நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி பல்வேறு தரப்பினருடன் இணைந் தும், தனியாகவும் ஆய்வுகளை நடத்தவுள்ளது.

அதன்பிரகாரம் விரைவில் அறிக் கையொன்றை தயாரித்து சமர்ப் பிக்கவுள்ளது. அந்த அறிக்கை யின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இதேவேளை- தீவிரவாதத்தை தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

உலக நாடுகள் அனைத்துக் கும் தீவிரவாதம் பெரும்சவலாகி வருகையில் அதனைக் கட்டுப் படுத்துவதற்கும் வலுவான சட்ட ஏற்பாடுகள் அவசியமாகின்றன. அந்த அடிப்படையில் அதுபற் றிய கரிசனைகளும் வெகுவாகச் செலுத்தப்பட்டுள்ளன - என்றார்.

(ம-14-இ)

# ஜனாதிபதி தேர்தலை நடத்த ரணில் தயார்!

## உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, நவ. 7

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வரு கின்றார் என்று உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சி பலவீனமாக உள்ளதால், தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்கும், அதனூடாக உறுதியான ஆட்சியை நடத்துவதற்கும் ரணில் உத்தேசித்துள் ளதாக அறியமுடிகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுடன் கடந்த சில நாள்களாக பேச்சை மேற்கொண்டு வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று உடனடியாக வருமா யின் ரணிலை வேட்பாளராக நிறுத்தி அவரை வெற்றிபெறச்செய்ய ஒத்துழைப்பை வழங்கு வதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் தீர் மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

(ம-14-இ)

# கடன் வட்டி உயர்வு மக்கள் பரிதவிப்பு!

## சமூக சக்தி மக்கள் அமைப்பு மத்திய வங்கிக்கு கண்டனம்

கொழும்பு, நவ. 7

கடன் வட்டி வீதத்தை மத்திய வங்கி அதிகரித் துள்ளமையால் கடன் பெற்றவர்கள் அதனை மீளச்செலுத்த முடியாது பரிதவிக்கும் நிலைமை தோன்றியுள்ளது என சமூக சக்தி மக்கள் அமைப்பு கண்டனம் தெரிவித்து மத் திய வங்கி ஆளுநருக்கு மனுவொன்றை கையளித்துள்ளது.

அந்த மனுவில் சமூக சக்தி மக்கள் அமைப் பின் அழைப்பாளர் சட்டத்தரணி சுதேஷ் பிர சன்ன ஜயவர்தன குறிப்பிட்டதாவது:-

மத்திய வங்கி கடன் வட்டி வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் கடன் பெற்றவர்கள் அதனைச் செலுத்த முடியாது திண்டாடுகின்றனர். கடனாளிகள் சிலர் தமது உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே கடன்பெற் றோருக்கு நிவாரணத் திட்டத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண் டும் என்று வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

# எகிப்துக்கு ரணில் நேற்றுப் பயணம்

கொழும்பு, நவ. 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எகிப்துக்கு நேற் றுக் காலை பயணம் மேற்கொண்டுள்ளார்.

எகிப்தில் இன்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள காலநிலை மாற்றம் தொடர் பான 'கோப் 27' மாநாட்டில் பங்கேற்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க எகிப்துக்குச் சென்றுள்ளார்.

(ம-14-இ)

# ஜனாதிபதி வசம் 5 அமைச்சுக்கள்

கொழும்பு, நவ. 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 4 அமைச்சுப் பதவிகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் தீர் மானித்துள்ளார்.

பிரதமருடனான கலந்தாலோசிப்பின் பின் அரசமைப் பின் 44(3) பிரிவின் பிரகாரம் இதுதொடர்பில் விசே வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த வர்த்தமானியை நேற்று வெளியிட்டார்.

அதன்படி நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, மகளிர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஆகிய 4 அமைச்சுக்களே ஜனாதிபதியின் கீழ் இயங்கவுள்ளன.

இதேவேளை- இந்த 4 அமைச்சுக்கள் தவிர, பாது காப்பு அமைச்சும் ஜனாதிபதியின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அரசமைப்புச்சபையை நியமிப்பது தொடர்பில் பேச்சு


கொழும்பு, நவ. 7

இலங்கையின் நாடா ளுமன்றில் புதிதாக நிறைவேற்றப்பட்ட அர சமைப்பின் 21ஆவது திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நிய மிப்பது தொடர்பாகக் கலந்துரையாடுவதற் காக கட்சித் தலைவர் கள்நாளை செவ்வாய்க் கிழமை கூடவுள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடை பெறும் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர் பான குழுக் கூட்டத் தின்போது இந்த விட யம் கலந்துரையாடப்ப டவுள்ளது.

இந்த அரசமைப்புச் சபையில், சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகி யோர் அதிகாரபூர்வ உறுப்பினர்கள் ஆவர்.

இதேவேளை-அரச மைப்பு பேரவைக்கு தனது பிரதிநிதியாக அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவை நிய மிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மா னித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகி



யுள்ளன.

பத்து உறுப்பினர்க ளைக் கொண்ட அர சமைப்புச் சபையா னது அரசாங்கத்தின் பெரும்பான்மை நாடா ளுமன்ற உறுப்பினர் களால் பரிந்துரைக்கப் பட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர்களால் பரிந்துரைக் கப்பட்ட ஒரு உறுப்பினர், பிரதமர் மற்றும் எதிர்க்கட் சித் தலைவரின் உடன்ப டிக்கையுடன் சபாநாயக ரால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பேரையும் உள் ளடக்கியிருக்கும். (எ-இ)

# தேர்தலை ஒத்திவைத்தால் சட்ட நடவடிக்கை பாயும்!

## பவ்ரல் தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

பல்வேறு காரணங்களை முன்வைத்து உள்ளூ ராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயன்றால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் கண்கா ணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் நிலைமை தொடர்பாகக் கலந்துரை யாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தனியார் பஸ் தரிப்பிடத்தில் நாளைமுதல் பேருந்துச் சேவைகள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்.நகரின் மையப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து நாளை செவ்வாய்க்கிழமை முதல் பேருந்துச் சேவைகள் அனைத்தையும் இயக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தனியார் பஸ் சேவையினது உள்ளூர் சேவை, வெளி மாவட்ட சேவைகள் மற்றும் கொழும்புக்கான இரவுச் சேவைகள் என மூன்று வகையான பஸ் சேவைகளும் நாளை புதிய தனியார் பஸ் நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

போக்குவரத்து பொலிஸாருக்கு உதவும் வகையில் மாநகரசபையால் திசைகுறிகாட்டி பலகைகள் பொருத்தப்படுவதுடன் போக்குவரத்து பொலிஸாரால் இந்த நடைமுறை கடுமையாகப் பின்பற்றப்படும். தனியார் போக்குவரத்துப் பிரிவினரின் உள்ளூர் பஸ் சேவை, புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும் என்பதுடன் மீண்டும் வரும் போது பயணிகளை புதிய தனியார் பஸ் நிலையத்தில் இறக்கிச் செல்லும்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் நிலையத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் புறப்படும் நீண்டதூரப் பயணிகள் பஸ்கள் மருத்துவமனை வீதி ஊடாக சத்திரச்சந்தி சமிக்ஞை விளக்கை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்து வெளிமாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்வதுடன்மீண்டும்வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பஸ்களும் இந்த வழிப்பாதையூடாகவே பயணத்தை மேற்கொண்டு பஸ் தரிப்பிடத்தை வந்தடையும்.

மேலும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் தரிப்பிடத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் புறப்படும் நீண்டதூரப் பயணிகள் பஸ்கள் மருத்துவமனை வீதி ஊடாக வேம்படி வீதிக்குச் செல்வது தடை செய்யப்படுகின்றது.

இதற்காகப் போக்குவரத்துப் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்பு பெறப்படும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூரப் பஸ் தரிப்பிடத்தில் இரவு நேர கொழும்பு பஸ் சேவைகள் கடந்த வாரத்திலிருந்து நடைபெறுகின்றன - என்றுள்ளது. (ம-14)

## பேருந்திலிருந்து தவறி வீழ்ந்து ஒருவர் சாவு!

### இத்தாவிலில் சம்பவம்

கிளிநொச்சி, நவ. 7

பேருந்தில் பயணித்த ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பளை - இத்தாவில் ஏ-9 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கொடிகாமம் - மீசாலை பகுதியைச் சேர்ந்த குகதாசன் விமல்ராஜ் (வயது-47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலாவுக்குச் சென்று திரும்புகையிலேயே இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

# கிரிக்கெட் வீரர் குணதிலக பாலியல் வழக்கில் கைது!

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க இலங்கை கிரிக்கெட் சபை தயார்




**கொழும்பு, நவ. 7**

**இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் தனுஸ்க குணதிலக, 29 வயதான பெண்ணொருவரை வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.**

இலங்கை கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடியது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தைத் தொடர்ந்து இலங்கை அணி தொடரில் இருந்து வெளியேறியது. இந்த நிலையிலேயே சமூக வலைத்தளத்தில் அறிமுகமான பெண்ணொருவரை சிட்னியில் உள்ள வீடொன்றில் வைத்து வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் குணதிலக கைது செய்யப்பட்டுள்ளார். குணதிலகவுக்கு பொலிஸ் பிணை மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

குணதிலக மீதான குற்றச்சாட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டால் அவர் அந்த நாட்டுச் சட்டதிட்டங்களின் அடிப்படையில் கடுமையாகத் தண்டிக்கப்படலாம் என்று அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தவிவகாரம்தொடர்பில்இலங்கை கிரிக்கெட் சபை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இந்த விவகாரத்தை உன்னிப்பாக இலங்கை கிரிக்கெட் சபை கண்காணித்து வருகின்றது என்றும் குணதிலக மீதான குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்டால் அவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் சர்வதேச கிரிக்கெட் சபையுடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ம)



## கனகபுரம் துயிலுமில்லத்தில் நேற்று சிரமதானப் பணிகள்

கிளிநொச்சி, நவ. 7

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் பணிக்குழுவினரின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளர் சுரேன், சமூக செயற்பாட்டார்கள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச)

## எதிர்வரும் 30ஆம் திகதி

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள்!

கொழும்பு, நவ. 7

கடந்த மே மாதம் நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கேற்ப, விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 5 லட்சத்து 17 ஆயிரத்து 486 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 4 லட்சத்து 7 ஆயிரத்து 129 பேர் பாடசாலை விண்ணப்பதாரர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. [illegible]

## பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18 . 08 . 1986

இறப்பு
07 . 11 . 2005



பிலேந்திரன் ஜேம்ஸ்

*அப்பா !*
*நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து*
*பதினேழு ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது*

அன்பான மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**மலர்மகள் அடைவு மாடம் - மல்லாவி**

மேற்படி நீங்கள் மலர்மகள் நகை அடைவு மாடத்தில் அடைவு வைக்கப்பட்டு ஒரு வருடங்கள் முடிவடைந்த அடைவு நகைகளை (31.10.2021) இற்கு முன்னர் மீட்டுக்கொள்ளவும் அல்லது வட்டியினை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும் தவறும் பட்சத்தில் நகைகள் விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். இறுதித்திகதி 31.11.2022

**மலர்மகள் அடைவு மாடம் - மல்லாவி**
**077 345 9144, 077 807 4413** (CS 47480) (3/6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1937



மறைவு 06 . 11 . 2022

### திரு.கந்தையா நாகராசா


உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ்.வீதி இணுவில் மேற்கு. இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா நாகராசா அவர்கள் கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் நடராசா அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணியின் அன்புக் கணவரும் உதயகுமார், செல்வகுமார், சந்திரகலா (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி), கலாறஜனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்), யோகேஸ்வரி (லண்டன்), கமலலோஜினி (ஆசிரியை, யாழ்/மத்திய கல்லூரி), சுகந்தி (உதவிமுகாமையாளர், இலங்கை வங்கி, வட பிராந்திய அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அஜிதா (ஆசிரியை, யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), ஞானேஸ்வரி, சத்தியநேசன், பாலசுப்பிரமணியம் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலி.மேற்கு பிரதேசசபை), அருட்செல்வன் (லண்டன்), கோபீஸகன் (வேலை மேற்பார்வையாளர், யாழ் மாநகரசபை), ஜெயச்சந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஆகியோரின் மாமனாரும் கலாத்மிகா, சந்தோஷ், விகஷ்னி, கேசிகன், சிவனுஜன், நவீன், சயனிகா, விசாகன், விகாஷ், காருண்ஜா, பிரணாத், தஷ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைரவிப்பிள்ளை மகாலிங்கம்

திக்கம்புரை வயாவிளானை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட **கம்பர்** என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் **வைரவிப்பிள்ளை மகாலிங்கம்** அவர்கள் கடந்த 27.10.2022 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்கண்டு - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும், புஷ்பலதாவின் பாசமிகு கணவரும், யாழேசன், யாழருதி, ஆரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷ்காவின் மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற கதிரவேலு, சரஸ்வதி, காலஞ்சென்ற தவராசா, ஆனந்தராசா, செல்வலிங்கம், முகிலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வுகள் லண்டனில் இன்று 07.11.2022) திங்கட்கிழமை DarjiCommunity Cantre, ShreeDariGnatimandel, VicarageLane (Offloughborough Road) Leicester எனும் முகவரியில் பிற்பகல் 14.00 மணிமுதல் 15.30 மணிவரை நடைபெறும். அதன்பின் அங்கிருந்து தகனக்கிரியைக்காக திருவுடல் Gilroes Cemetery and Crematorium க்கு எடுத்துச்செல்லப்பட்டு மாலை 16.00 மணிமுதல் 17.00 மணிவரை இலங்கை நேரப்படி ( இரவு 9.00மணிமுதல் 10.00 மணிவரை) திருவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கெவின் - 0044 7960 766 059
முகிலன் - 0044 7951 123 629
தீசன் - 0044 7727 121 936
செல்வம் - 0044 7769 044 524
விமலதீசன் - 077 354 5107

தகவல்:
குடும்பத்தினர்.

(cr. 7023) (2/6)

# ஆங்கில தின நிகழ்வு இன்று

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியா சாலையில் ஆங்கில தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் ஜே. கோகுலவாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி சங்கீதா தயானந்தன் கலந்து கொள்வார். (ச)

## ஹெரோயினுடன்...

சந்தர்ப்பங்களில் உயிர்கொல்லி ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வழிப்பறி, திருட்டுச் சம்பவங்களின் அதிகரிப்புக் காரணமாக இளவாலைப் பொலிஸார் வடலியடைப்புப் பகுதியில் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்து, கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர்களைச் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து 99 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோயின் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை இளவாலையைச் சேர்ந்த இன்னொரு இளைஞரும் 60 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைதானாரெனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-26)


**தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு**

எம்மிடம் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும்,மற்றும் நல்லின தென்னம்பிள்ளைகளும் விற்பனைக்குண்டு.

077 659 2044


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர் வைத்திய கலாநிதி **ஹஜனி சங்கரநாதன்** அவர்களின் அன்புத் தந்தை

### ச. சங்கரநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS 21634) (3/6)

**வடமாகாண
ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்.**

## ஐ.நா...

காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் எகிப்து சென்றுள்ள சந்தர்ப்பத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தேசிய சுற்றுச்சூழல் கொள்கை தொடர்பான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் இதன்போது தெளிவுபடுத்தினார். (அ-ஒ-இ)

## மரண அறிவித்தல்

### கதிரவேலு நாகராசா



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பழைய வீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு நாகராசா நேற்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு காந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வெற்றிவேலு நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலசுந்தரத்தின் (கனடா) அன்புச் சகோதரனும், தவயோகராணியின் (நந்தினி) அன்புக் கணவரும், நிந்துஷா, மேனுஷா (லண்டன்), தனுஷன் (பிரான்ஸ்), சிந்துஷா, ஜீவந்திகா, டுபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகிந்தன், ஜெயரூபன், மயூனிக்கா, பிரசாந் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரனாஸ், பவிசாந், தேனுயன், கவின், ஜொய்சனா, ஜிஜோத்திகா, அஹானா ஆகியோரின் அன்புப் பேரனும், கிரிஜா (கனடா), சிவராசா (கண்ணன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகிர்தமலரின் உடன்பிறவாச் சகோதரனும், அபிநயா, பானுப்பிரியனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்புடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 21674) 1-6 **077 9352 462**

தகவல் :
குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.01.1950 மறைவு 07.11.2012

### சவரிமுத்து தோமஸ்

(முன்னாள் தொழில்நுட்பவியலாளர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
Rtd. Technician, Royal Airforce of Oman)

ஈரைந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன
இன்றும் உங்கள் பெயரிற்கு உள்ள
மதிப்பு சற்றேனும் குறையவில்லை
நீங்கள் ஒருபோதும் சொன்னதில்லை
உங்கள் புகழை
ஊரிற்குள் உங்களைப் புகழாதோர்
யாருமில்லை இன்றுவரையில்
"இருந்தாலும் மறைந்தாலும்
பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று
ஊர் சொல்ல வேண்டும்."
இவ்வரிகள் உங்களுக்காய்
எழுதப்பட்டதாய்
தோன்றுகின்றது அப்பா.

குடும்பத்தினர்.
கெனடி வீதி, நாவாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நடுங்கள்"
—கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)



## சர்வதேசத் தலைகுனிவு

நலிவடைந்த பொருளாதாரம், சுற்றிலும் கடன்கள், வீழ்ந்து வரும் ஏற்றுமதி வர்த்தகம் இவையெல்லாம் இலங்கைக்குப் புதிதல்ல. இனவாதமும், அதன் தொடர்ச்சியான போரும் இந்தத் தீவின் 70 ஆண்டுகளை மொத்தமாகத் தின்றொழித்த போதிலும் ஒரேயொரு விடயத்தில் இன்னாள் வரையும் இலங்கைதன் அடையாளத்தை– நிமிர்நடையை இழக்கவே யில்லை. அந்தவிடயம் தான் கிரிக்கெட்.

கெல்மண்டி என்ற வீராங்கனை ரியோ ஒலிம்பிக்கில் வென்ற தங்கப்பதக்கம் எவ்வாறு 'கொசோவோ' என்ற நாட்டை சர்வதேச அரங்கில் பேசுபொருளாக்கியதோ, அவ்வாறுதான் இலங்கைக்கு 1996 ஆம் ஆண்டின் உலகக்கிண்ணம். ஒட்டு மொத்த கிரிக்கெட் வல்லரசுகளின் கண்களில் விரலைவிட்டு ஆட்டி இலங்கைக்கு வந்த அந்த உலகக்கிண்ணம்தான் இலங்கை என்றவொரு அழகிய தீவை உலக அரங்கில் பேசு பொருளாக்கியது. ஆனால், இன்று நிலைமையே வேறு. சர்ச்சைகளும் ஊழல்களும் மலிந்த களமாக மாறிக்கொண்டிருந்த 'இலங்கைக் கிரிக்கெட்', இன்று சர்வதேச தலைகுனிவையும் இணைந்தாற்போல் எதிர்கொண்டிருக்கின்றது.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான 31 வயதான தனுஷ்க குணதிலக, 29 வயதான பெண்ணொருவர் வழங்கிய பாலியல் முறைப்பாட்டை அடுத்து, அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வைத்துப் பொலிஸாரால் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். 'இணையத்தளத்தில் அறிமுகமாகி தனது அனுமதியின்றி தன்னை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார்' என்று தனுஷ்க குணதிலக மீது பாதிப்புற்ற பெண்ணால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. மொத்தமாக நான்கு குற்றச்சாட்டுக்கள் இந்த வழக்கில் குணதிலக மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்ற அடிப்படையில் குணதிலகவுக்குப் பொலிஸ் பிணை மறுக்கப்பட்ட நிலையில், இன்று திங்கட்கிழமை அவர் சிட்னி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

இவ்வாறானதொரு குற்றச்சாட்டில் குணதிலக சிக்கிக்கொள்வது இதுவொன்றும் முதல்முறையல்ல. கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்துக்கு இலங்கை அணி சுற்றுப்பயணம் மேற்கொண்ட காலத்தில், இதே தனுஷ்க குணதிலக, கொரோனாப் பாதுகாப்பு வளைய நடைமுறைகளை மீறி, பொதுவெளிக்குச் சென்று (பயோ பபிள் மீறல் இது உயிராபத்தை ஏற்படுத்தும் குற்றமாகக் கருதப்பட்டது) புகைப்பிடித்த மூன்று வீரர்களில் ஒருவராக அடையாளம் காணப்பட்டு, அவருக்கு ஒரு வருடம் தடை விதிக்கப்பட்டது. பின்பு அந்தத் தடை தளர்த்தப்பட்டு, அவர் அணிக்குள் உள்வாங்கப்பட்ட போதிலும் தற்போது மீண்டும் ஒரு களங்கத்தை – சர்வதேசதலைகுனிவை தேடிக்கொடுத்தமைதான் அவர் இலங்கைக்காகச் செய்த ஆகப்பெரும் சாதனையாக இருக்கின்றது.

இலங்கைக் கிரிக்கெட்டின் நீண்டகால வரலாற்றில் இது போன்ற சம்பவங்கள் இதுவரையில் நடைபெற்றதேயில்லை. இன்னும் சொல்லப்போனால் உலக அரங்கில் ஆகப்பெரும் கனவான்களாக இலங்கை வீரர்கள் இருந்திருக்கின்றனர். குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, ரணதுங்க, சமிந்த வாஸ் என்று இந்தப் பட்டியல் நீட்சிபெறும். இதனால்தான் கிரிக்கெட்டின் விதிகளை இயற்றும் கிரிக்கெட்டை ஆளும் எம்.சி.சி. போன்ற உயர் சபைகளின் தலைமைப் பதவியை சங்கக்காரவால் அலங்கரிக்க முடிந்தது. வெறும் திறமையை வைத்துக்கொண்டு இவ்வளவு பலம்பொருந்திய சபைகளின் தலைமைப் பதவியை அலங்கரிக்க முடியுமா? திறமைக்கு மேலாக சங்கக்கார கொண்டிருந்த நற்பண்புகள்தான் இந்த அடைவுகளுக்கு மூலகாரணம்.

இந்தப் பெருமைகளையெல்லாம் கொன்று புதைப்பது போன்று, கிரிக்கெட் அரங்கில் இலங்கைக்கும் இலங்கையர்களுக்கும் ஏற்படுத்திய இந்தக் களங்கத்துக்காக தக்க ஒழுக்காற்று நடவடிக்கையை இலங்கை கிரிக்கெட் சபை மேற்கொள்ள வேண்டிய தருணம் இது. வீரர்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும் அணிக்குத் தேவைப்பாடுடையவர்களாக இருந்தாலும் நற்பண்பில்லையேல் அவர்கள் ஒன்றுமேயில்லை என்பதை முன்மாதிரிகையாக இலங்கைக் கிரிக்கெட் சபை வெளிப்படுத்த வேண்டிய தருணமும் இதுவே.




# துன்பத்திலிருந்து மக்களை மீட்ட பின்னரே தேர்தல்கள்!

## ஐ.தே.க.வின் பொதுச்செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 7**

**மக்களைத் துன்பங்களில் இருந்து மீட்ட பின்னர்தான், இந்த நாட்டில் தேர்தல் என்பது நடத்தப்படவேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் சுமையை நாட்டு மக்களால் தாங்க முடியாது என்பதால், 8 ஆயிரமாக இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4 ஆயிரமாகக் குறைக்கும் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார். அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளது என்பதால், துறைக்குப் பொறுப்பான அமைச்சர் எல்லைகளை நிர்ணயம் செய்ய குழுவொன்றை நியமிக்க முடியும். இதற்காக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் குழு வொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.
மக்கள் தற்போது வெற்று அரசியலை வெறுக்கின்றனர்,
இதனால், மக்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வதில்லை. கூட்டங்களை ஏற்பாடு செய்வோருக்கு மக்கள் 'கூ' சத்தம் போடுகின்றனர். வாழ்வது தொடர்பான பிரச்சினை தற்போது மக்களுக்கு இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியால் தனியாக நாட்டை மீட்கமுடியாது. நாங்கள் அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயற்படுவோம்.
இதனால், அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்தே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்கும். நாங்கள் தேர்தலை ஒத்திவைக்கமாட்டோம். எமக்கு சாதகமற்ற பல சந்தர்ப்பங்களில் நாங்கள் தேர்தலை நடத்தியுள்ளோம். ஆனால், மக்கள் படும் கஷ்டங்களில் இருந்து அவர்களை மீட்ட பின்னரே தேர்தலை நடத்த வேண்டும் - என்றார். (ம)

# மனிதாபிமான அணுகுமுறையை வலியுறுத்திய இந்திய கடற்படை!

கொழும்பு, நவ.7
இந்திய மீனவர்களிடம் மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்தியக் கடற்படை இலங்கைக் கடற்படையிடம் வலியுறுத்தியுள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை வங்காள விரிகுடாவில் இலங்கைக் கப்பலில் நடைபெற்ற இந்தியக் கடல் எல்லைக்கோடு கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பு மற்றும் இந்திய மீனவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் மீது மனிதாபிமான அணுகுமுறையைக் காட்ட வேண்டும் என்று இலங்கை பாதுகாப்பு நிறுவனங்களை இந்தியப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். இரு தூதுக்குழுக்களும் விரைவான தகவல் பகிர்வின் அவசியத்தை வலியுறுத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

**நாளை** 08.11.2022 செவ்வாய்க்கிழமை ஐப்பசி 22
சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப் பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். கருத்துவேறு பாடுகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவி னர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர் கள். உறவினர்கள் உதவியுடன் சுப நிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங் கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும் பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்க ளால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரி களால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உதவி கிடைக்கும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பா ராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச் சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். உறவி னர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. பொறுமை யைக் கடைப்பிடிப்பது நல்லது.




2022 ஆம் ஆண்டு மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய 18 வயதுக்குட்பட்ட அணி இரண்டாம் இடத்தைப்பெற்று தேசிய மட் டத்துக்குத் தெரிவாகியது. (ஒ-14)

## கட்டுநாயக்கா செல்வதற்கான பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்டன

### மக்கள் அசௌகரியம்

கொழும்பு கோட்டையிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வரை செல்லும் பேருந்து சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங் களுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் பேருந்துகள் விமான நிலையத்தின் பிரதான நுழைவா யில் ஊடாகப் பயணித்துப் புறப் படும் மற்றும் வருகை முனையங் களைக் கடந்து மீண்டும் பிரதான வீதியில் வெளியேறும். பிரதான நுழைவாயில் வரை பேருந்து சேவையை மட்டுப்படுத்தியமைக் கான காரணம் குறித்து மேல் மாகாண வீதி போக்குவரத்து அதி காரசபையிடம் வினவப்பட்டபோது, விமானநிலையம் மற்றும் விமான நிறுவனத்தின் தலைவரின் ஆலோ சனைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அதன் தலைவர் பிரசன்ன சஞ்சீவ தெரி வித்தார். (ச-இ)

## மத்திய வங்கியின் இயலாமையால் நாட்டுக்கு வராத ஏற்றுமதி வருமானம்

■ சுரஞ்சய அமரசிங்க
தலைமைச் செயலர், ஐக்கிய தொழிலாளர் கூட்டமைப்பு.

அந்நியச் செலாவணியின் பற்றாக்குறையால், நாடு உற்பத்தியில் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் நிலைவரப்படி இலங்கையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 14.3% வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அதிக பணவீக்கத்தால் வேலையின்மை அதிகரித்துள்ளது. பணவீக்கம் அதிகரித்து உற்பத்திகள் குறையும்போது பொருளாதார வல்லு நர்கள் அதை 'ஸ்டாக்பிலேஷன்' என அழைக்கிறார்கள். இதன் விளைவாக மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் உணவுப் பாதுகாப்பின்றி உள்ளதுடன், சுகாதாரப் பாதுகாப்பில் நெருக்கடி மற்றும் வாழ்வாதாரத்தில் பேரழிவான சரிவை எதிர்கொள்கின் றார்கள். கொரோனாத் தொற்றால் இலங்கையில் உழைக்கும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு, ஊதியச் சரிவு மற்றும் வேலை வாய்ப்புகள் குறைவடைதல் போன்ற காரணங்களால் மக்கள் தற்போது வாழ்வாதார நெருக்கடி மற்றும் கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையில் அறிக்கையிடப்பட்ட உயர்மட்ட வர்த்தக ஏற்றுமதிப் பொருள்களின் வருவாயாக அமெரிக்க டொலர் 8.9 பில்லியன் காணப்படுகின் றது. மேலும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இறையாண்மைக் கடன் இடைநிறுத்தப்பட்ட பின்னர் இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களுக்கான கொடுப்பனவுகள் கணிசமாகக் குறைந்தன.

இந்தப் பின்னணியில் கடந்த ஜூன் மாதத்தில் 21 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக உபரியை பதிவு செய்தது. ஜனவரி - ஓகஸ்ட் இடைப்பட்ட காலத்தில் இலங்கை சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலரை சேவை ஏற்றுமதி வருவாய் மற்றும் 2.2 பில்லியன் அமெரிக்க டொலரை வெளிநாட்டு ஊழியர்களிடமி ருந்தும் பெற்றுக்கொண்டது.

இந்தக் கடன் அல்லாத அனைத்து அந்நியச் செலாவணி கூட் டுத்தொகை கிட்டத்தட்ட 13.1 பில்லியன் அமெரிக்க டொலர் வரை சேர்கின்றன. ஜனவரி - ஓகஸ்ட் இடையிலான காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவு 12.8 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

அந்தப் காலப்பகுதியில் இலங்கை இந்தியாவிடமிருந்து 4.2 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெற்றுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி கையிருப்பு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர், சீனா பரிமாற்ற வசதியை தவிர்த்து கடந்த செப்ரெம்பர் மாதத்துக்குள் 380 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. சந்தேகத்துக் கிடமின்றி, இலங்கையின் உள்நாட்டு நிதி அமைப்பு சுதந்தி ரத்துக்குப் பின்னர் மிக மோசமான அந்நியச் செலாவணி பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

ஏற்றுமதியாளர்கள் தாம் ஈட்டும் ஏற்றுமதி வருமானத்தை இலங் கைக்கு கொண்டு வராததன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட் டுள்ளது. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இந்த விடயம் மாத்திரமே காரணம் என நாம் கூறவில்லை. ஆனால் நாடு எதிர்நோக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இன்றியமையாத நடவடிக்கையாக இந்த பிரச்சினை தாமதமின்றி தீர்க்கப்படல் வேண்டும்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி வெளியிடப் பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய விதிகளின்படி இலங்கைக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்துப்பொருள்கள் அல்லது சேவைகள் தொடர்பான மிகுதியான வருமானம் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாள்களுக்குள் இலங்கைக்கு அனுப்பப் படல் வேண்டும் அல்லது சேவைகளை வழங்கும் திகதி இறக் குமதி செய்யப்பட்டு உள்நாட்டு நிதி அமைப்பில் முழுமையாக இணைக்கப்படல் வேண்டும். எந்வொரு ஏற்றுமதியாளரும் இந்த நிபந்தனையை மீறினால், அந்த ஏற்றுமதியாளருக்கு எதிராக 2021ஆம் ஆண்டின் விதி எண் 5இன் பிரிவு 8இன் கீழ் தேவை யான நடவடிக்கை எடுக்க மத்திய வங்கியின் அந்நியச் செலா வணி திணைக்களத்தின் இயக்குநருக்கு அதிகாரம் உள்ளது.

இதுதொடர்பில் 2022ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் திகதி கருத்துத் தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பீ.நந்தலால் வீரசிங்க, ஏற்றுமதி வருமானத்தில் 20 சதவீதத்துக்கும் குறைவான தொகையே மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவதாகக் கூறினார். ஏற்றுமதியாளர்கள் மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவது ஏற்றுமதி வரு மானத்தில் 10 சதவீதத்துக்கும் குறைவான அளவுகளே என வங்கியியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தில் 65 வீதத்தை மட்டும் மீண்டும் இந்நாட்டுக்கு கொண்டு வந்தனர் என மத்திய வங்கி ஆளுநர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா வொஷிங்டனில் அமைந்துள்ள ஆராய்ச்சி அமைப் பால் வெளியிடப்பட்ட 2009 - 2018 காலங்களில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் 134 இனது வர்த்தகம் தொடர்பில் சட்ட விரோத நிதி ஓட்டங்கள் எனும் அறிக்கையில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் 40 பில்லியன் டொலருக்கு அதிகமான தொகையை தவறான விலைப்பட்டியல் செய்வதன் மூலம் இலங்கைக்கு வெளியே கொண்டு சென்றுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகள் இலங்கைப் பொருளாதாரத்தின் தற்போதைய வீழ்ச்சிக்கு நீண்ட பங்களிப்புச் செய்யும் முக்கியமான காரணி என்பதை மறுக்கமுடியாது.

இதன் விளைவாக வட்டி விகிதங்கள், அந்நியச் செலாவணி விகி தங்கள் மற்றும் பண மாற்று விகிதங்கள் போன்ற உள்நாட்டு நிதிக் கருவிகள் மூலம் மூலதன ஓட்டத்தைக் கட்டுப்படுத்த முடியா மல் போவதால் இலங்கையின் பொருள்கள் மற்றும் உழைப்பு சந்தையில் சமநிலையை உருவாக்க முடியாது. பொருளாதார வல்லுநர்கள் இந்த நிலைமையை 'அந்நியச் செலாவணி பணப் புழக்கப் பொறி' என்று அழைக்கின்றனர். வேறு வார்த்தைகளில் கூறுவதனால் அந்நியச் செலாவணிக்கான தேவை, மாற்று விகிதம் மற்றும் உள்நாட்டு வட்டி விகிதத்தை பொருத்தமட்டில் எல்லையற்ற நெகிழ்ச்சியற்றது. இது வெளிநாட்டு சந்தை துறை களினுள் தோல்வியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருள்களின் பற்றாக்குறை, அதிக பணவீக்கம், வேலையின்மை மற்றும் வாழ்வாதாரத்தில் சரிவு ஏற்படுவதற்கு காரணியாக இருப்பதுடன் அத்தியாவசிய பொருள் களின் விலைகளைக் குறைத்தல் மற்றும் அத்தியாவசிய இறக்குமதிகளை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய் வதற்கு அரசின் நேரடி தலையீடு ஒரு கட்டாய காரணியாகிறது.

ஏற்றுமதி வருமானத்தை மீளவும் பெற்றுக்கொள்வது உட்பட வங்கியின் விதிமுறைகளுக்கு இணங்காத நபர்களுக்கு எதி ராக அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கியிடம் கேட்டுக்கொள்கிறோம்.

1949ஆம் ஆண்டு நாணயச் சட்டத்தின் பிரிவு 9 (2) (திருத் தப்பட்டது) இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி திணைக்களத்துக்கு ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டுக் கணக் குகளுக்கு நேரடி அணுகல் மற்றும் வைத்திருக்கும் ஏற்றுமதி வருமான நிலுவைகளை மீண்டும் இந்நாட்டுக்கு பெற்றுக்கொள் தல் உள்ளிட்ட பரந்த அதிகாரங்களை வழங்குகிறது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். வங்கியின் விதிமுறைகளை மீறும் வகையில் வங்கியின் அந்நியச் செலாவணித் துறையானது ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு கணக்குகளை அணுகவும், ஏற்றுமதி வருமானத்தை உள்ளூர் வங்கி முறைக்கு வெளியே திருப்பி அனுப்பவும், வங்கியின் விதிமுறைகளுக்கு இணங் காத ஏற்றுமதியாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டொன்று நினைவுப் பகிர்வு

தோற்றம் 06 . 08 . 1943

மறைவு 19 . 10 . 2021



## அமரர் திரு. கனகசபை கருணானந்தராஜா

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவி நிலை தொழில் நுட்பவியலாளர்
இரசாயனவியற்றுறை - யாழ். பல்கலைக்கழகம்)

**திதி: வளர்பிறை சதுர்த்தசி**

ஆறாத்துயர் தந்து நீங்களெமைப் பிரிந்து
மீளாத்துயில் கொண்டு ஆண்டொன்று ஆனதப்பா

பெற்றுவளர்த்தெடுத்து, பேணி உணவூட்டி
உற்றநோய் தீர்த்து பாலர் முதல் வாலைப்பருவம் வரை
உள்ளத்தை வளப்படுத்தி உலகில் நல்லவராய் நாம் வாழ வழிகாட்டி
பண்புடனே நமையெல்லாம் பக்குவமாய் வளர்த்து

கோவில் குளம் திருவிழா என்றே எமை அழைத்துச்சென்று
உலகைக் காட்டி உவகை ஊட்டி, மிட்டாயும் வாங்கித்தந்து
வளர்த்த எம் அருமை அப்பாவே!

பாசம் என்னவென்று படித்தது உங்களிடத்தில்
நேசம் என்னவென்று புரிந்துகொண்டது உங்களன்பால்
ஏசும் சொற்களை நாம் ஒருபோதும் கேட்டறியோம்
துன்பம் கண்டபோதும் கூட துவண்டதில்லை நீங்கள்

கண்கண்ட தெய்வங்கள் அப்பு, ஆச்சி, அக்கா, அத்தான் பிள்ளைகளென
பிறந்த வீடு ஒரு நாளும் மறந்ததில்லையே நீங்கள்
புகுந்த வீட்டிலும் கூட மைத்துனர்கள் ஐவருடனும்
தங்கையுடனும் ஒரு வீட்டு பிள்ளையாய் இருந்தீர்களே
மருமக்கள் வாஞ்சையுடன் யாரை அப்பா இனி மாமா என அழைப்பது

தெல்லியூர் யூனியன் கல்லூரியும், மகாஜனாக் கல்லூரியும்
தந்த இடை நிலைக் கல்வியால் பேராதனைப் பல்கலைக்கழகம்
ஆங்கிலம், தமிழ், சிங்களம் என மும்மொழியும் சரளமாக
பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடமதில் பெற்ற
நற்தொழில் தந்த சிறந்த பயிற்சியுடன் யாழ். பல்கலைக்கழக
இரசாயனவியற்றுறை உயர்வுக்கு ஆரம்பம் முதல்
பேராசிரியருடன் பங்கேற்ற அப்பாவே!

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவனாய்
ஊழியர் நலனுக்காகக் குரல் கொடுத்து
பொது வாழ்வுப் பணியும் சிறக்க வாழ்ந்தீர்கள் அப்பா!

மேலைத் தேசமதில் மேலோங்கிப் படிக்கவிட்டு
ஏற்றம் நாம் காண ஏணியாய் இருந்த நீங்கள்
நலம் காண எண்ணாது நம்மைவிட்டு
ஏனப்பா விரைந்து சென்றீர்கள்?

இப்புவியில் பட்டகடன் எத்தனையோ
அத்தனையும் தீர்த்திடலாம்
அப்பா, உங்களிடம் நாம் பெற்ற கடனை
ஏழேழு ஜென்மதிலும் தீர்த்திடவும் முடியுமா?
நற்றவம் செய்துவிட்டோம் நானிலத்தில்
தந்தையாய் கணவனாய் நாம் உமை அடைவதற்கு
கரம்பிடித்த நாள் முதல் கணவர் பணிவிடை என
கைவிட்டதொன்றில்லை
சீற்றம் சினப்பின்றிப் பாசமாய் பார்த்த எனை
என்ன குறைகண்டு நீங்கள் இடை நடுவில் விட்டுச் சென்றீர்கள்

உளம் மகிழ, பார் மகிழ வாழ்ந்த உங்கள் வீடு
வெறிச்சோடி ஆண்டொன்று ஆனதப்பா
கம்பீரமான உங்கள் குரலையும்
சிரிக்க வைக்கும் உங்கள் உரையாடலையும்
மறுபடியும் கேட்க நாம் தவிக்கிறோம்.
மீண்டும் எவ்விடத்தில் எப்போது உங்களைக் காண்போம்.

**"லிங்க வாசா"**
**கே.கே.எஸ். வீதி, இணுவில்.**
**07.11.2022**


மீளாத்துயருடன்
**குடும்பத்தினர்.**

(cs.18697) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 07 . 1943

இறப்பு 06 . 11 . 2022



## அருட்திரு. ஜேக்கப் திருச்செல்வம் அ.ம.தி.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு. ஜேக்கப் திருச்செல்வம் அ.ம.தி. அடிகளார் நேற்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மிருசுவிலைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை யாக்கோப்பு. பிலிப்பையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற ஜேக்கப் மரியநாயகம் மற்றும் அருட்சகோதரி மேரி பொஸ்கோ (திருக்குடும்ப கன்னியர் சபை). அருட்சகோதரி மேரி ஹென்றியல் (அப்போஸ்தலிக்க கார்மேல்சபை). அருட்திரு. ஜேக்கப் நீக்கலஸ் (பங்குத்தந்தை. புனித செபமாலை அன்னை ஆலயம் - கொழும்புத்துறை) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை. சுவாமியார் வீதியில் உள்ள புனித இயுஜின் டிமசனட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (07.11.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்துக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள். அருட்சகோதரிகள். உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**
**அருட்திரு. ஜேக்கப் நீக்கலஸ் - சகோதரன்**
**077 541 2017**

(cs47485) (2.6)

# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 05 . 1941

உதிர்வு 03 . 11 . 2022



## திருமதி மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் (மலர்)

யாழ். வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பிரான்ஸ் ஆகிய இடங்களில் வசித்தவருமான திருமதி மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் (மலர்) கடந்த 03.11.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் முருகேசு நாகம்மா முருகேசு தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் (பாலா ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இரத்தினேஸ்வரி, தவனேஸ்வரி, மகாலிங்கம் மற்றும் புனிதவதி (லண்டன்), மனோகரநாதன் (பாபு, கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தா (அவுஸ்ரேலியா), ஜெந்தா (கொழும்பு), ஜெயபிரகாஸ் (சுவிஸ்லாந்து), சுஜாதா (லண்டன்), காலஞ்சென்ற சுனித்தா மற்றும் சுவர்ணக்குமாரி (அமெரிக்கா), அஜினா (ஜேர்மனி), கல்பனா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வித்தியாசேகரம் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற சிவகுலரத்தினம் மற்றும் ராஜீனி (சுவிஸ்லாந்து), கந்தசுவாமி (லண்டன்), அமரசிங்கி (அமெரிக்கா), ஸ்ரீவிக்கிரமநாராயணன் (சிறி - ஜேர்மனி), பாலேஸ்வரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (08.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு வட்டுக்கோட்டை மூளாய் வீதி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 .00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு இறுதி யாத்திரை ஆரம்பமாகி பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**நடராசா அமரசிங்கி (மருமகன்),**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**
**மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.**

தொடர்புகளுக்கு:
**பாபு (சகோதரன்)**
**021 205 3452**
**077 6040284**

(cr 38455) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
06 - 04 - 1982

மறைவு
05 - 11 - 2022

## திரு. குகதாசன் விமல்ராஜ் (விமல்)

**தாதிய உத்தியோகத்தர் – 2006 II பிரிவு விடுதி இல்லம் – 19**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதி இலக்கம் 19 இல் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு.K விமல்ராஜ் அவர்கள் கடந்த (05.11.2022) சனிக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார். அன்னாரது பிரிவால் ஆறாத்துயர் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நண்பனது பிரிவால் ஆறாத்துயரில் வாடும்**
**2006 II பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்**
**யாழ்ப்பாணம்.**

(CS 47514) (3/6)

# மரண அறிவித்தல்



பிறப்பு
22 . 08 . 1942

இறப்பு
03 . 11 . 2022

## திருமதி கனகாம்பிகை சுந்தரலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை சுந்தரலிங்கம் கடந்த (03.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - யோகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், சிவசோதி மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கோகிலம், தாமோதரம்பிள்ளை, கோபாலசிங்கம், யோகராசா, கிருஷ்ணவேணி மற்றும் கலாவதி, காலஞ்சென்ற ராஜலட்சுமி ஆகியோரின் அருமை மைத்துனியும், சிவதர்சினி (லண்டன்), சிவச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேசரன், லெஸ்லி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்மினி, கீர்த்தனா, விக்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**42, விபுலானந்தர் வீதி,**
**கொழும்புத்துறை மேற்கு, அரியாலை.**

(cs.21669) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**பூலோகத்தில் மலர்வு**
**22.10.1936**

**விண்ணுலகில் உதிர்வு**
**03.11.2022**

## துரைச்சாமி துரையம்மா

யாழ்ப்பாணம் சரவணையைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமன் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி துரையம்மா கடந்த (03.11.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் பாசமிகு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சோமசுந்தரம், நாகலட்சுமி, தில்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விநோதமஞ்சரி, காலஞ்சென்றவர்களான துரேஷ், துசியந்தன் மற்றும் துச்சாதனன், துளசிதாசன், அனுசமஞ்சரி, மதீஷமஞ்சரி, சிவநேசமஞ்சரி, துரோணலிங்கம், துவாம்சன், துசித்தாமஞ்சரி, துஷ்யந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவரட்ணம், இராசமலர், அருட்செல்வி, தர்மானந்தி, நவசக்தி, தெய்வேந்திரன், உதயசந்திரன், செல்வரட்ணம், பத்மலோஜினி, இராசமோகனா, வீரசுந்தரம், அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மேனகா, தீலீபன், துளாஜினி, இராகவன், சுரேன், குருபாளினி, துரூபன், துளக்ஷி, அபிராமினி, துசேந்திரன், துவாரகன், ஜதுனன், சயந்தன், அனுசன், தர்மநிக்ஷன், மாதுமையாள், தர்மநிஷாந்தன், தர்மராஜன், ஒலிவர், ஜோர்சன், அதிசயா, பிரசண்ணா, விதுசன், கோபிசன், திவான், ஆரூரன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திவ்யன், அரவின், தேஜல், பிரஜன், ஸ்ரீபன், மெலீனா, செலீனா, லீஷா, அஸ்லியா, சாய், கவின், துளசிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சனாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**077 037 2631**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09 . 11 . 1990

மறைவு 05 . 11 . 2022

## திரு. சிவபாலன் சிவரூபன்

(வெள்ளை)

வார்த்தை தடுமாறுகின்றதே நேற்றுக்கண்ட உனை நினைத்து
நெஞ்சம் உருமாறுகின்றதே! காந்தமாய் எமையீர்த்த உனை
காலனுனை கவர்ந்து சென்றதேனோ? காலமெல்லாம் உம் உறவு
நினைத்துருக காததூரம் எமைவிட்டு சென்றதேனோ? - நாமோ !!! இன்று
மாங்காத உன் நினைவால் மயங்கியே நிற்கின்றோம்
நிழல்போல் இருந்தவன் நீ நினைவாய் மாறினாய்.... !
கண் இமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியாகினாய்...!
இதயங்களெல்லாம் நொறுங்க, இமைகளெல்லாம் நனைய ,
எங்களை தவிக்கவிட்டு எங்கோ நீ பயணமானாய்...!!!
நீ எங்களை விட்டு தூரத்திலில்லை நினைவுகளில் இருக்கிறாய்...!
எங்கும் போகவில்லை நீ எங்கள் இதயங்களில் வாழ்கிறாய் ...!!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆழ்ந்த துயரத்துடன்
வேலும் மயிலும் குடும்பத்தினர்

(CS 47482B) (3/6)

# மரண அறிவித்தல்



மலர்வு 09 . 11 . 1990

உதிர்வு 05 . 11 . 2022

## திரு. சிவபாலன் சிவரூபன்

(வெள்ளை)

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. சிவபாலன் சிவரூபன் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2022) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிவபாலன் - கலைவாணி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும், கவிதா, ஜீவிதா (கனடா), யேந்திகா (கனடா), றசித்தா உஷாந்தன், காலஞ்சென்ற துவாரகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேம்நாத் (ஜேர்மனி), சுரேஸ்குமார் (கனடா), காலஞ்சென்ற சிந்துஷன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், ஷமீரா (கனடா), அத்விக் (கனடா), ஆதியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 5.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரம்பவாளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாய் - 077 123 6319
உஷாந்தன் (சகோதரன்)
077 416 9960

தகவல்:
குடும்பத்தினர்
வீரபத்திர கோவிலடி, உடுப்பிட்டி.

(CS 47482) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 19 . 11 . 1936

மறைவு 09 . 10 . 2022

கடந்த 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை
இறைபதமடைந்த எமது தாயார்

## திருமதி வேலாயுதம் குஞ்சுப்பிள்ளை

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை (08.11.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.
021 205 7191

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 04 . 1982

இறப்பு 05 . 11 . 2022

## குகதாசன் விமல்ராஜ்

( தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை -யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு கைதடியை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு இராமாவிலை வதிவிடமாகவும் கொண்ட குகதாசன் விமல்ராஜ் அவர்கள் (05.11.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார்குகதாசன் - அன்னபூரணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலம்சென்ற சிவகணேசன் (நில அளவை அதிகாரி ), இராசாத்தி (யோகம்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், துசியின் ஆருயிர் கணவனும், சபீஷன், ஜர்மிஷன், டலிசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராஜ் (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரனும், குசந்தன் (களஞ்சிய காப்பாளர் இலங்கைப் போக்குவரத்துச் சபை, வடபிராந்தியம்), மகிந்தன் ( லண்டன் ), எழில்மதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அகிலா, சுபா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும் அஷ்ணவி, கேசவர்சன், மதீஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை, பி.ப 4.00 அளவில் மீசாலைவடக்கு, இராமாவிலில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரிகைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகிறோம்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் .

தொடர்புகளுக்கு
தந்தை குகதாசன் :- 077 880 2555
மைத்துனர் குசந்தன் :- +94 (77) 994 3979
மைத்துனர் மகிந்தன் :- +44 7846 385265

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிக் கொண்டிருந்த

## திரு. குகதாசன் விமல்ராஜ்

அவர்கள் கடந்த (05.11.2022) சனிக்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தாதியர் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS47487)(3/6)

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 11 . 1933



இறப்பு 06 . 11 . 2022

## திருமதி சுப்பையா சிவபாக்கியம்

இல.03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா சிவபாக்கியம் அவர்கள் நேற்று (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை சிவக்கொழுந்து தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற முத்து சுப்பையாவின் அன்பு மனைவியும், கலாநிதி காலஞ்சென்ற விஜயகுமார், வசந்தாதேவி, கங்காதேவி, சுரேஸ்குமார் (லண்டன்), கருணாகரன் (லண்டன்), சதீஸ்குமார் (நீதவான் நீதி மன்றம், யாழ்), கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் யோகராசா (செல்வம், ஓய்வுபெற்ற தலைமைப் பாதுகாவலர் சிறைச்சாலை), சின்னையா (சின்னராசா), கோபாலகிருஸ்ணன் (ஓய்வு. பொலிஸ்சார்ஜண்ட்) மற்றும் சண்முகராசா (வர்த்தகர்), அருளானந்தம் (ஓய்வு. பொலிஸ் சார்ஜண்ட்), ஜெயலட்சுமி, சிவசோதி, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற கலாமதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நிர்மலானந்தன் மற்றும் சிவதாஸ், கிருஸ்ணசுசி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிராமி, சாங்கவி, சாம்பவி, அன்றூட் சிவபாலன் (லண்டன்), ரஞ்சித் ஆகியோரின் பேர்த்தியும், ஹோகுல்நாத், பவிஷன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, கனகம்மா, சின்னம்மா, பராசக்தி, மற்றும் பத்மராணி, பிறேமா, ருக்மணி, கோபாலசிங்கம், மருதவாணன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 47486) (3/6)

# 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1924



மறைவு 25 . 10 . 2007

## அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா J.P

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)

திதி: 07.11.2022

பதினைந்து (15) ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவில் வாழும்

(CS 21643 ) (3/6)

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 - 01 - 1952



இறப்பு 07 - 11 - 2012

## தேவதாஸ் ராஜினி

நீங்கள் இவ் உலகை வீட்டு நீங்கி
பத்து ஆண்டுகள் சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்


இல. 73/16,புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு,
கல்வியங்காடு

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 21631) (3/6)

# கண்ணீருடன்.....

மலர்வு 26 . 09 . 1942



உதிர்வு 04 . 11 . 2022

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும்,
பிரதம ஆலோசகரும்,எமது ஸ்தாபக இயக்குநரின்
வலதுகரமாக செயற்பட்டவருமான

## பி.எஸ். அல்பிரட்

அவர்களுக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி.அவரது இழப்பால் துயருறும் குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

இயக்குநர்கள், அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்

238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

**குறிப்பு:** இன்று பி.ப.2.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் யாழ். திருமறைக் கலாமன்றத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. இந் நிகழ்வில் மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

## போதைப்...

போதைப்பாக்கை விற்பனை செய்த சந்தேகத்தில் ஒருவரையும், அதனைக் கொள்வனவு செய்த சந்தேகத்தில் இருவரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து 3 கிலோ 100 கிராம் உயிர்கொல்லி கஞ்சா கலந்த போதைப்பாக்கு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாகவே இந்தக் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

உடுவில் பகுதியைச் சேர்ந்த 41 வயதான ஒருவரே விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது கைதாகியுள்ளார். பாற்பண்ணையைச் சேர்ந்த 21 மற்றும் 30 வயதான இரு இளைஞர்கள் இதனை வாங்குவதற்கு வந்த நிலையில் கைதாகியுள்ளனர். அவர்களது உடைமையிலும் உயிர்கொல்லி போதைப்பாக்கு மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்ட உயிர்கொல்லிகஞ்சா கலந்த போதைப்பாக்கு வியாபாரியிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் போது, நீண்ட காலமாக யாழ்ப்பாண புறநகர் பகுதிகளில் ஒவ்வொரு இடங்களிலும் கொண்டு சென்று இதனை விற்பதாகவும் நல்ல வருமானம் கிடைப்பதாகவும், நீண்ட காலமாக இந்தத் தொழிலை மிகவும் சூட்சுமமான முறையில் மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மூவரும் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

(அ-ஒ-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தணிப் பாடசாலைகள்; மாகாணத்தின் அதிகாரங்களை பறிக்கும் மற்றொரு முயற்சி

## கண்டிக்கிறார் முன்னாள் மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன்

யாழ்ப்பாணம், நவ. 7

மாகாண பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக உள்வாங்குவதற்குப் பதிலாக கொத்தணி பாடசாலைகளை உருவாக்குவதற்கான திட்டத்தை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார். இது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு முரணானதுடன் மாகாணசபைகள் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புக்கும் எதிரானது - என வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் துணைச் செயலாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

முன்னணிப் பாடசாலைகளை மையப்படுத்தி கொத்தணிகள் உருவாக்கப்படும். ஜனவரி மாதத்தில் ஆயிரத்து இருநூறு கொத்தணிகள் அடையாளம் காணப்படும். இதன் மூலம் அண்மித்த பாடசாலைகளுக்கு இடையே பௌதிக வளங்களும் மனித வளங்களும் பரிமாறப்படும். இவை கல்வி அமைச்சரான சுசில் பிரேமஜயந்தவின் புதிய அறிவிப்புகளாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் கல்வி மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட விடயமாகும். மாகாணங்களுக்கான கல்விக் கொள்கைகளை வகுத்தல், பாடவிதானங்களைத் தயாரித்தல், பாடசாலைகளை நிர்வகித்தல், பாடசாலைகளுக்கான வளங்கள் மற்றும் வளப்பகிர்வுகள் தொடர்பில் முடிவெடுத்தல் இவை அனைத்துக்கும் மேலாக, மாகாணப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் ஆகியவை மாகாணக் கல்வி அமைச்சுக்கு உரிய அதிகாரங்கள்.

அதனை மீறும் வகையில் மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்கள் மீது மத்திய அரசு தான்தோன்றித்தனமாகக் கொள்கை வகுக்க முடியாது.


மத்தியால் வெளியிடப்படும் கொள்கை மாகாணங்களுக்குப் பொருந்தாத விடத்து, மாகாணங்கள் அதனை நிராகரித்து, தமக்கான பொருத்தமான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த முடியும். அவசியமேற்படின், அனைத்து மாகாணக் கல்வி அமைச்சர்களின் கலந்தாய்வின் அடிப்படையில் எல்லா மாகாணங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கல்விக்கொள்கை உருவாக்கப்படும் பட்சத்தில், அவற்றை அந்தந்த மாகாணங்கள் சட்டமாக்கிச் செயற்படுத்த முடியும்.

இவை அனைத்துக்கும் மேலாக, கல்வி அமைச்சரால் வெளியிடப்பட்ட கொத்தணிமுறை திட்டமானது 1970 ஆம் ஆண்டுகளில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, படுதோல்வியுடன் கைவிடப்பட்ட ஒரு திட்டமாகும்.

கல்வி அமைச்சர் புதிதாக கல்வி முறைமையில் மாற்றம் செய்வதாக நினைத்துக்கொண்டு கல்வியை மேலும் சீரழிக்கும் நிலைமையைத் தோற்றுவிக்காது இருக்கவேண்டும். பாடசாலைகளின் சமத்துவமான வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள் தேவையே. அதனை அந்தந்த மாகாணங்கள் தமது வளங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப உருவாக்கிச் செயற்படுத்தும். மத்திய கல்வி அமைச்சானது அவற்றுக்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கினாலே போதுமானது - என்றுள்ளது. (அ-ஔ-இ)

### மாவீரர்நாளை...

தமிழீழ தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர்வாரம் இந்த மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரையில்



கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்காக தாயக தேசத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்துள்ள இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் பணி நேற்று இடம்பெற்றது. மாவீரர்களின் கல்லறைக்கு அகவணக்கம் செலுத்தி அஞ்சலி மேற்கொண்டு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. அது முடிவடையும் நேரத்தில் அங்கு அடம்பன் பொலிஸார் வந்தனர்.

சிரமதானப் பணி தொடர்பில் விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டனர். தொடர்ந்து மாவீரர்நாளன்று - நவம்பர் 27ஆம் திகதி மாவீரர்நாளை நினைவுகூர்ந்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துச் சென்றனர். (அ-ஔ-56)

### 'ஜனநாயகப்...

'இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்' நிறுவனத்தால் வழங்கப்படும் இந்த விருது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாடநெறியை முடித்த 75 பேர் டிப்ளோ பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த வருடாந்த டிப்ளோமா வழங்கும் விழாவில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய பாடங்களுக்காக தன்னை அர்ப்பணித்த புகழ்பெற்ற அரசியல் பிரமுகர்களின் மதிப்பீடு நடத்தப்படுகிறது.

அதற்கமைய, அதில் இரா.சம்பந்தன், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஜனநாயகப் பொன்விருதைப் பெற்றார். நான்கு தசாப்தகால நாடாளுமன்ற வாழ்க்கையில் ஜனநாயகத்துக்காக சம்பந்தன் காட்டிய அர்ப்பணிப்பை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவும் கலந்து கொண்டிருந்தார். (அ-ஔ-22)

### சுதுமலையில்...

விட்டு நேற்றுக் காலை கீழே வந்தபோது வீடு உடைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பணம் வைத்த இடத்தைப் பார்த்தபோது, களவு போயுள்ளமை தெரியவந்துள்ளது. (அ-ஔ-27)

### மாட்டுடன்...

மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெயவீரசிங்கம் (வயது - 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் ஜெயவீரசிங்கமும், இன்னொருவரும் வீதியில் சென்றுள்ளனர். இதன்போது வீதியில் படுத்திருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற ஜெயவீரசிங்கம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (அ-ஔ-113)

### சம்பந்தரைப்...

வராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பதுபோல் தமிழ் மக்களுக்கும் சிறந்த ஒரு தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விளங்குகின்றார் - இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்குப் பொருத்தமான சிறந்த ஆளுமை உடைய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால்தான் அவரின் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. அவரின் ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் நாடு மீண்டெழும் என்ற அதீத நம்பிக்கை எம்மிடம் உண்டு.

இதேவேளை- சம்பந்தனின் காலத்தில் தீர்வைத் தாம் வென்றெடுக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எண்ணமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்எம்முடன் ஒன்றிணைந்து தொடர்ந்து செயற்பட்டால் அவர்களின் எண்ணம் விரைவில் நிறைவேறும். அவர்கள் எதிர்க்கட்சியினர் போல் விலகி நின்று செயற்பட்டால் தீர்வு விடயத்தில் நாம்எப்படி அவர்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க முடியும்?

எதுவாகினும் தேசியப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தில் தீர்வுகளை வழங்குவார் - என்றார். (அ-ஔ-22)

### ஹெரோய்னுக்கு...

இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒக்ரோபர் மாதம் மாத்திரம் 183 பேர் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் என்று மருத்துவப் பரிசோதனைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 155 பேர் சிறைச்சாலையிலிருந்து மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளனர். 28 பேர் நீதிமன்றத்தின் ஊடாக அனுப்பப்பட்டு மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட தாமாக முன்வந்து சமூகமயப்படுத்தல் சிகிச்சையில் இணைந்து கொள்ளும் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஔ-5)

### லிட்ரோ...

இதன்படி, 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4 ஆயிரத்து 360 ரூபாவாகவும், 5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டர் 30 ரூபா அதிகரித்து புதிய விலை ஆயிரத்து 750 ரூபாவாகவும், 2.3 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டர் 15 ரூபா அதிகரித்து, புதிய விலை 815 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (அ-ஔ-இ)

### சந்தேகநபரிடமிருந்து...

தாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம் மத்தியிலுள்ள பலசரக்குக் கடையொன்றின் முன்பக்க கதவை நூதனமான முறையில் திறந்து உள்ளே புகுந்து திருடன் வெளியேறும்போது கடை உரிமையாளர் கண்டுள்ளார். திருடனை விரட்டிச் சென்றபோதும் தப்பித்துள்ளான். கடையினுள் இருந்த 5 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது. திருடிச் சென்ற சந்தேகநபரின் அடையாளமும் தெரிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக 18 வயதான இளைஞன் உடனடியாகக் கைது செய்யப்பட்டான்.

அவனிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இதேவேளை- வேறு சில திருட்டுக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய வழக்குகளிலும் இவன் தொடர்புபட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஔ-125)

### தூரசேவைப்..

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விபத்து தொடர்பான அறிக்கையைப் பொலிஸாரிடம் கோரியுள்ளேன். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வடக்கு மாகாணத் தலைவருடனும் கலந்துரையாடியுள்ளேன். இதன் அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. யாழ். - கொழும்பு உட்பட ஏனைய தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தையும் வடக்கு மாகாணத்துக்குள் ஓர் இடத்தில் ஒவ்வொரு நாளும் வழித்தட அனுமதியை பரிசோதித்தல், ஏ-9 பாதையில் ஏதோ ஒரு இடத்தில் பேருந்துகளை 10 நிமிடங்கள் நிறுத்தி சாரதிகளை சோர்வு தன்மையில் இருந்து நீக்குதல், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் தூரசேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்துகளின் தரப் பரிசோதனையை மேற்கொள்ளல் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், வவுனியா - யாழ்ப்பாணம் இடையிலான நேரக்கட்டுப்பாட்டையும் பேருந்துகளுக்கு விதிக்கவுள்ளோம்- என்றார். (அ-ஔ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத அடிப்படைகளில் கட்சிப் பதிவு இடம்பெறாது

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 7

**இனம் மற்றும் மதங்களை மையப்படுத்திய அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவுசெய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சமூகத்துக்கு நன்மை பயக்கும் விதத்தில் கடந்த காலங்களில் எல்லை நிர்ணயம் இடம்பெறவில்லை. இன, மத, குல பேதங்களின் அடிப்படையில் அவ்வாறான பணி இடம்பெறக்கூடாது. இன மற்றும் மதங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் பதிவுசெய்வது நிறுத்தப்படும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள் தொடர்பிலும் ஆய்வுசெய்த பின்னர், உரிய தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (எ-44)

## அரச வாகனங்கள் தொடர்பில் திறைசேரியால் புதிய அறிவிப்பு

### வெளியாகியது சுற்றறிக்கை

அரச நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை, உயர் அதிகாரிகள் ஓய்வுபெறும் போது அவர்களிடமே ஒப்படைத்துவிடும் முறையை நிறுத்துமாறு திறைசேரித் திணைக்களம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அரச அதிகாரிகள் ஓய்வுபெறும்போது, அவர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை, அந்த அதிகாரிகளுக்கே மாற்றுவது தொடர்பான கேள்விகளை கோப் குழு, எழுப்பிய பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வாகனங்களின் உரிமைகளை மாற்றுவதில், அரச நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து உட்கொள்கைகளையும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்த நிதி அமைச்சு முடிவு செய்துள்ளது.

தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- சில அரச நிறுவனங்கள், திறைசேரிக்கு தெரிவிக்காமல் வாகனங்களை மாற்றுவதற்கான ஆவணங்களை அனுப்பியிருப்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது - என்றுள்ளது. (ம-14-இ)

## பெரமுனவுக்குள் பிளவு

கொழும்பு, நவ. 7

பெரமுனவின் உட்கட்சிச் செயற்பாடுகள் தொடர்பில் அந்தக் கட்சியின் இளம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மஹிந்த தலைமையில் பொதுஜன பெரமுன நடத்தி வரும் பொதுக்கூட்டங்கள் கண்டி - நாவலப்பிட்டி, களுத்துறை, புத்தளம் ஆராச்சிக்கட்டு பிரதேசங்களில் அண்மையில் நடைபெற்றன. இதில் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள், இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ளவில்லை என்றும் அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்றுடன் பதிவுகள் அனைத்தும் நிறைவடைகின்றன
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை லைக்கட்ட விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றனர்
0768226244

வேலை வாய்ப்பு
கோண்டாவில் சந்தி பலாலி வீதியிலுள்ள விற்பனை நிலையமொன்றிற்கு பெண் விற்பனை உதவியாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
078 583 2356

பணிப்பெண் தேவை
கொழும்பில் வீடு ஒன்றில் தங்கிநின்று வீட்டு வேலை செய்ய பணிப்பெண் தேவை. தங்கும் இடம், உணவு வசதி, சம்பளம் வழங்கப்படும்.
076 937 5344

பணிப்பெண் தேவை
குழந்தை பராமரிப்புக்கு ஆள் தேவை.
077 117 3275
(CS 21668 1/3/6)


இலவச அமெரிக்க லொத்தர் விசா
வருடம்தோறும் 55000 பேர் அமெரிக்கா செல்லும் அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள்.
இன்றுடன் முடிவடைகின்றது.
திருமுருகன் கொம் நெற் பிறைவேட் லிமிட்டெட்
தொடர்புகளுக்கு : 0777554528 321, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

துரித கடிதங்கள் பொதிகள் சேவை
▲சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
▲கனடா 11 Kg - 1200/=
DHL
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு.
● நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
● அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
● வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
பார்வையிடும் நேரம்:-
● காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை.
தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457

வீனஸ் விசேட வைத்தியசாலையானது கடந்த 19.10.2022 அன்று தனது அடுத்த சகாப்தத்தை நோக்கிய பயணத்தில் புதிய ஆண்டில் காலடி எடுத்து வைத்தது
அன்றைய தினம் வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் சிறப்பு ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.




அன்றைய தினம் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும் தற்போதைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினருமான சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய நிபுணர் திருமதி நில்மினி கெட்டியராச்சி, கிறீன்கிறாஸ், வலம்புரி விடுதியின் பணிப்பாளர் திரு தி.ஜெகசீலன் ஆகியோரால் கொடியேற்றல் வைபவம் இனிதே நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 'உயிர்காக்கும் உன்னதபணி' என்னும் தொனிப்பொருளில் வைத்தியசாலை பணியாளர்களினால் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'இரத்ததானம்' வழங்கப்பட்டது. இதன்போது இரத்த வங்கியின் வைத்தியநிபுணர் திருமதி நில்மினி கெட்டியராச்சி கருத்து தெரிவிக்கையில் தனியார் வைத்தியசாலை பணியாளர்களின் நிகரற்ற சேவையை மெச்சினார். அத்துடன் இரத்த வங்கியின் சேவைகளுக்கு என வைத்தியசாலைப் பணிப்பாளரின் துணைவியாரால் ரூபா ஒரு இலட்சம் நிதியுதவி நன்கொடையாக வழங்கப்பட்டது


விநாயகர் ஆலய ஆராதனையின் போது


கொடியேற்றல் வைபவத்தின்போது


இரத்ததான வைபவத்தின் போது


இரத்த வங்கிக்கான ரூபா ஒரு இலட்சம் நன்கொடையின் போது


வைத்தியசாலைப் பணிப்பாளரும் பணியாளர்களும்

இல 136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 021 222 8470 / 021 222 4172




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.